## பொலிஸ் வெகுமதி நிதியம் - 2020

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று உரித்து மாற்றங்களுக்கான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1865 இன் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 73(4) ஆம் பிரிவு , இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியததின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காகத் தபால் திணைக்களத்திடமிருந்து பெற வேண்டிய வாகனப் போக்குவரத்து | தபால் திணைக்களத்திடமிருந்து 2020 ஆம் வருடத்திற்கான பெற வேண்டிய ஒக்டோபர், நவம்பர் | வருடத்திற்கான வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தண்டப் பண வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கில் எடுக்கப்படாமையினால் வாகனப் போக்குவரத்து தண்டப் பண வருமானம் மற்றும் பெறவேண்டிய வாகனப் போக்குவரத்து தண்டப் பண வருமானம் என்பன ரூபா 150,127,525 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மாதங்களுக்கான ரூபா 150,127,525 ஆன பணம் 2021 ஆம் வருடத்தில் பெறப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 09 நீதிமன்றங்களினால் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த வருமானத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பெறுமதி மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையினுடன் வருடாந்த நீதிமன்ற தண்டப்பண வருமானம் ஒப்பிடப்பட்டபோது 05 நீதிமன்றங்களின் மொத்தம் ரூபா 26,781,427 குறைவாகவும் 04 நீதிமன்றங்களின் மொத்தம் ரூபா 10,336,765 அதிகமாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | நீதிமன்ற வருமானம் உறுதிப்படுத்தப்பட்ட பெறுமதி மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணை இலக்கம் 03 இல் நீதிமன்ற தண்டப்பண வருமானம் ஒப்பிடப்பட்ட போது இரு நீதிமன்றங்களின் மொத்தம் ரூபா 183,694 ஆன தொகையொன்று குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. மூன்று நீதிமன்றங்களினால் அறிக்கையிடப்பட்டிருந்த தண்டப்பணம் அதிகமாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | இணங்காமைகள் பரீட்சிக்கப்பட்டு காரணம் கண்டுபிடிக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பெறப்பட்ட நிலையான வைப்பு வட்டி வீதம் மற்றும் புதுப்பித்தல் அறிவித்தல்களில் (Renewal Notice) குறிப்பிடப்பட்டுள்ள வட்டி விகிதங்களின் வேறுபாடு காரணமாக மீளாய்வாண்டின் 04 நிலையான வைப்புக்களுக்கான கணக்கிடப்படாத நிலையான வைப்புகளுக்கான வட்டி ரூபா 2,467,022 அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் வட்டி வருமானம் ரூபா 2,467,022 ஆன தொகையொன்று அதிகமாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் வருடத்தில் நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதன் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான முதலீட்டு வருமானம் கணக்குகளில் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கணக்காய்வில் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் நிலையான வைப்புக்கள் 04 இற்கான மீளாய்வாண்டின் வட்டி வருமானம் 03 நிலையான வைப்புக்களுக்காக ரூபா 367,859 அதிகமாகவும் வைப்பொன்றுக்காக ரூபா 32,824 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | 2020 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் நிலையான வைப்புக்கள் முதலீட்டு வருமானத்தில் ரூபா 335,035 ஆனது அதிகமாக கணக்கிடப்பட்டிருந்தது. 2021 ஆம் வருடத்தில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல்கள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான முதலீட்டு வருமானம் கணக்குகளில் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2016 ஆம் வருடத்திற்கான விசேட வெகுமதிக் கோவையில் | செலுத்தப்பட்டிருந்த விசேட வெகுமதித் தொகையான ரூபா | விசேட வெகுமதிக் கொடுப்பனவுகள் சரியாக |

| | | |
|---|---|---|
| மிகுதியாகவுள்ள ஐம்பது சதவீதத்திற்குக் குறைவான ரூபா 130,000 ஆனது மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அப் பெறுமதி செலுத்த வேண்டிய விசேட வெகுமதிப் பெறுமதியில் குறைக்கப்படாது வருடத்தின் செலவொன்றாக கணக்கிடப்பட்டிருந்தது. | 135,000 செலுத்த வேண்டிய விசேட வெகுமதி மிகுதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. செலுத்த வேண்டிய விசேட வெகுமதி மிகுதி ரூபா 90,876,211 என்பது சரியாக இருக்க வேண்டும். | கணக்குகளில் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) செலுத்த வேண்டிய விசேட வெகுமதியாக கணக்கிடப்படாத 2008 மற்றும் 2006 ஆம் வருடங்களுக்காக விசேட வெகுமதிக் கோப்புக்கள் இரண்டிற்கான மிகுதி ஐம்பது சதவீதமாக ரூபா 235,000 மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அது முன்னைய வருடத்தின் சீராக்கமொன்றாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படாது வருடத்தின் செலவொன்றாக சீராக்கப்பட்டிருந்தது. | 2020.09.15 இல் செலுத்தப்பட்ட ரூபா 175,000 மற்றும் ரூபா 60,000 ஆன தொகை விசேட வெகுமதிகளில் அரைவாசி கொடுப்பனவும் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுச் செலுத்தப்பட்டிருந்தது. அவை செலுத்தப்பட வேண்டியவைகளாக 2019 இன் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2020.12.31 இல் செலுத்த வேண்டிய விசேட வெகுமதி மிகுதி சரியானது. | - மேற்படி - |

### 1.5.2 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் அறிக்கை

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| 41 நீதிமன்றங்களுக்கான கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த வருமானம் உறுதிப்படுத்தல் பெறுமதி மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையில் வருட இறுதியில் பெற வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப் பண வருமான ஒப்பீடு | 103,400,336 | 30,467,288 | 72,933,048 | 11 நீதிமன்றங்களில் பெறவேண்டிய வருமானம் ரூபா 29,312,325 அதிகமாகவும், 02 நீதிமன்றங்களில் ரூபா 5,760,955 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | இணக்கமின்மைகள் பரீட்சிக்கப்பட்டு காரணங்கள் கண்டுபிடிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொலிஸ் அனுசரணை நிதியத்திற்கு முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 19 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடவேண்டிய மிகுதியாக காட்டப்பட்டிருந்தது. | பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2021.04.23 திகதி நாளேட்டுப் பதிவின் மூலம் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டு பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | முற்பணம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2001 ஆம் வருடத்திலிருந்து 2019 ஆம் வருடம் வரையின காலப்பகுதியில் பொலிஸ் அதிகாரிகளின் நிலுவையில் உள்ள செயல்கள் தொடர்பாக 50 சதவீதம் செலுத்தி முடிக்கப்பட்ட 400 விசேட வெகுமதி கோவைகளுக்கான மிகுதி வெகுமதி தொகையைச் செலுத்துவதற்கு ஒவ்வொரு வழக்கிலும் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்திருப்பதுடன், செலுத்தப்பட வேண்டிய மொத்த விசேட வெகுமதிப் பெறுமதி ரூபா 91,011,211 ஆகும். இந்த செலுத்த வேண்டிய விசேட வெகுமதி தொடர்பில் தகவல்கள் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு மீளாய்வாண்டில் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டு செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் செலுத்த வேண்டிய விசேட வெகுமதி தொடர்பான தகவல்கள் மீண்டும் பரீட்சிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென்பதை தெரிவிக்கின்றேன். | நீதிமன்ற நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு செலுத்த வேண்டிய விசேட வெகுமதி கோவைகள் தொடர்பான பின்தொடரல் ஒன்று செய்யப்பட வேண்டும். |

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396 | 2020 திசெம்பர் மாதம் வைப்பிலிடப்பட்டு ஆனால் 2021 யூன் 30 வரையில் வசூலிக்கப்படாத ரூபா 530,905 ஆன 06 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வசூலிக்கப்படாத காசோலைகளின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 351,200 ஆன தொகை 2021 நவம்பர் 12 ஆந் திகதி காசேட்டில் கணக்கிடப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சீராக்கங்கள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1.5.1 ஆம் பந்தி மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877. | | | |
| | • 3 ஆம் பந்தி | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் நிதியத்தின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படுவதற்கு முடியுமான வகையில் நிதியத்தின் பிரதான நோக்கங்கள் தொடர்பான காலாண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன்னர் அரச நிதித் திணைக்களம் மற்றும் பாதீட்டுத் திணைக்களத்திற்கான பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | உடன்படுகின்றேன். அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | • 5.3(ஆ) பந்தி | அரச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் செய்யப்பட்டிருந்த முதலீடுகளின் பெறுமதியை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் மிகுதி உறுதிப்படுத்தல் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட | உடன்படுகின்றேன்.<br><br>கணக்காய்விற்கு முதலீட்டு மிகுதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் 2021.01.04 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.2021 ஆம் வருடத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதிகள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| • 6 (உ) பந்தி | நிதிக் கூற்றுக்களில் புள்ளி விபரத் தரவுகள் மதிப்பின் கிட்டிய ரூபாவிற்கு எடுக்கப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. | சராசரியாக இரண்டு சதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 1.8 நிதி முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலிஸ் வெகுமதி நிதியத்திற்கு உரிய இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் சகல மாதங்களிலிலும் இறுதித் தினத்தில் காசேட்டின் பிரகாரம் மிகுதி குறைந்தது ரூபா 299 மில்லியன் தொடக்கம் அதிகபட்சம் ரூபா 695 மில்லியன் வரையான கால வீச்சில் காணப்பட்டது. அத் தொகையை முதலீடு செய்து வட்டி வருமானமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால் விளைவற்றதாகக் காணப்பட்டது. | நாட்டில் கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2020 ஆம் வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தடைப்பட்டதுடன் நிதிய முகாமைத்துவம் தொடர்பாகக் கவனம் செலுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டதன் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வளங்கள் அதிகபட்ச செயற்திறனுடன் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | பொலிஸ் பிரிவுகள் 06 இற்காக மீளாய்வாண்டில் வெகுமதிக்காகச் செலவிடுவதற்காக வழங்கப்பட்ட ரூபா 96,732,000 ஆன கட்டு நிதியில் செலவு செய்யப்படாது மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டிருந்த தொகை ரூபா 40,128,932 என்பதுடன் அத்தொகை 06 பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட | பிரிவுகளுக்கான சாதாரண கட்டு நிதிகள் வழங்கப்பட்டு அக்கட்டு நிதியை வழங்குவதின் அடிப்படையில் செலவிடப்படுவதற்கு உள்ள இயலுமை தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்படாமையால் கட்டுநிதி மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது. | தேவையான அடிப்படையில் மட்டுமே பணம் வழங்கப்படுதல் மற்றும் பெறப்பட்ட பணத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகையில் 22 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. மேலும் நுவரெலியா மற்றும் கொழும்பு பொலிஸ் பிரிவுகளுக்காக செலவிடுவதற்கு நான்காவது காலாண்டில் வெகுமதி நிதியத்திற்கு வழங்கப்பட்ட மொத்த கட்டு நிதியான ரூபா 13,674,300 ஆனது பயன்படுத்தப்படாது திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.<br><br>அதன் பிரகாரம் பிரிவுகளுக்கான கட்டு நிதி வழங்கப்படுதல் மற்றும் வெகுமதிகளைச் செலுத்த வேண்டியதன் தேவைப்பாடுகள் சரியாக இனங் காணப்படாது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |

### 1.9 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் வருடத்திலிருந்து 2020 ஆம் வருடம் வரையில் முறையே ரூபா 433, 386, 326, 469, 820, 1015, 1275 மற்றும் 1198 மில்லியன் ஆக மொத்தம் ரூபா 5,922 மில்லியன் நிலையான வைப்புக்களில் வட்டி வருமானமாக உழைக்கப்பட்டிருந்த போதிலும் இவ் வருமானம் நிதியம் நிறுவப்பட்டமைக்கான நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டதா என்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை. | நிதியத்தின் மிகை வருமானம் பயனுள்ளதான வட்டி வருமானத்தின் கீழ் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. அது நிதியத்தின் நலன்புரிச் செலவுகளுக்கு மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டது. | முதலீட்டு வருமானம் நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு மீளாய்வு ரூபா 1,340,208,192 ஆன மிகை என்பதுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 2,590,107,212 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,249,899,020 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப் பின்னடைவிற்கு போக்குவரத்து தண்டப் பண வருமானம் ரூபா 573,110,128 ஆல் குறைவடைந்தமை மற்றும் விசேட வெகுமதிக்கான கொடுப்பனவுகள் ரூபா 541,670,500 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல் என்பவற்றுக்கான இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விசேட வெகுமதியாக ரூபா 5,000 வீதம் 83,760 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 418,800,000 மற்றும் ரூபா 3,000 வீதம் 51,548 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 154,644,000 ஆக இரு சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்தமை, முன்னைய வருடத்தின் ரூபா 55,097,500 ஆன விசேட வெகுமதிக் கொடுப்பனவுகளின் பெறுமதி மீளாய்வாண்டில் ரூபா 596,768,000 வரையில் அதிகரிப்பதற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) போக்குவரத்து அறிவுறுத்தல் சுற்றறிக்கை 149/2019 இலக்கத்தின் பிரகாரம் குடிபோதையில் வாகனம் ஓட்டுவதால் பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை களைய வேண்டியது இன்றியமையாதது என்பதை உணர்ந்து இவ்வாறான சோதனைகளில் ஈடுபடுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்காக வெகுமதித் தொகை செலுத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், பண்டாரவெலப் பிரிவின் பொலிஸ் நிலையத்தினால் குடிபோதையின் வாகனம் ஓட்டியவர்கள் 2019 ஆம் வருடத்தில் 391 பேரும் மற்றும் 2020 ஆம் வருடத்தில் 800 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கந்தளாய்ப் பிரிவின் பொலிஸ் பிரிவினால் குடிபோதையில் வாகனம் ஓட்டியவர்கள் 2019 ஆண்டில் 113 பேரும் மற்றும் 2020 ஆம் வருடத்தில் 240 பெரும் கைது செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் கலந்து கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் பொலிஸ்மா | எதிர்காலத்தில் குடிபோதையில் வாகனம் ஓட்டுகின்ற சாரதிகளை கைது செய்தல் தொடர்பாக வெகுமதித் தொகை வெலுத்துவதற்காக பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கையின் மூலம் தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | வெகுமதிப் பணத்திற்கு உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிபர்களுக்கு எவ்வித பரிசுத் தொகையொன்றும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | முன்னைய வருடத்தில் நடைமுறைச் சொத்துக்களாக காட்டப்பட்டிருந்த ரூபா 358,794 ஆன மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதி, மீளாய்வாண்டின் இறுதி வரையில் இனங்காணப்பட்டு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பிழந்த காசோலைகளின் மிகுதி 2021 ஆம் வருடத்தில் சீராக்கப்பட்டு சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதி தீர்க்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் விசேட வெகுமதி கொடுப்பனவிற்காக ரூபா 50,000,000 மதிப்பிடப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான செலவுகள் ரூபா 596,798,000 ஆனபடியால் பாதீட்டு மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செலவுகள் என்பவற்றுக்கிடையே முரண் 1094 சதவீதமாகும். | விசேட வெகுமதிக் கொடுப்பனவிற்காக ரூபா 50 மில்லியனும் நலன்புரி செலவுகளுக்காக ரூபா 575 மில்லியனும் ஒதுக்கப்பட்டிருந்தது. கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 5,000 மற்றும் ரூபா 3,000 கொடுப்பனவு நலன்புரிச் செலவாக உள்ளடக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் செலவுகளை மேற்கொள்ளல் அல்லது பாதீட்டு திருத்தங்கள் செய்யப்பட வேண்டியவை. |
| (ஆ) | நலன்புரிச் செலவுகளாக ரூபா 575,000,000 ஆனது பாதீட்டில் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் செலவுகள் ரூபா 93,277,390 ஆனபடியால் பாதீட்டு மதிப்பீட்டினை விட 84 சதவீதத்தினால் குறைவாக செலவிடப்பட்டிருந்தது. | ரூபா 573 மில்லியன் ஆன விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவு விசேட வெகுமதியின் கீழ் கணக்கிடப்பட்டிருந்ததால் நலன்புரிச் செலவுகள் குறைவடைந்திருந்தது. | - மேற்படி - |